செய்தி வெளியீடு எண். 07 நாள்: 03.01.2018

## முன்னாள் படைவீரர்கள் மற்றும் சார்ந்தோர்களுக்காக சிறப்பு குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் ரூ. 2 இலட்சத்தி 55 ஆயிரத்து 19 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

திருவள்ளுர் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டரங்கத்தில் முன்னாள் படைவீரர்கள் மற்றும் சார்ந்தோர்களுக்காக சிறப்பு குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (03.01.2018) நடைபெற்றது.

இச்சிறப்பு கூட்டத்தில் மாவட்டத்தைச் சார்ந்த முன்னாள் படைவீரர்கள் மற்றும் சார்ந்தோர்கள் திரளாக கலந்துகொண்டனர். இச்சிறப்பு குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் சுமார் 60 முன்னாள் படைவீரர் மற்றும் சார்ந்தோர்கள் கலந்து கொண்டனர்.

முன்னதாக திருமண நிதியுதவி 4 நபர்களுக்கு ரூ. 80 ஆயிரத்திற்கான காசோலையும், கல்வி உதவித்தொகை 7 நபர்களுக்கு ரூ.1 இலட்சத்தி 37 ஆயிரத்து 900-க்கான காசோலையும், மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் ஒரு நபருக்கு ரூ. 37 ஆயிரத்து 119 மதிப்பிலான காசோலையும் ஆக மொத்தம் ரூ. 2,55,019 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

பின்னர், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பான மனுக்கள் அளித்தனர். இம்மனுக்கள் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு கோரிக்கைகள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் உதவி இயக்குநர் (முன்னாள் படைவீரர் நலன்) திருமதி.அமிருன்னிஷா மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**